வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

## லீமாரோஸின் 'பௌர்ணமி வெளிச்சம்' சிறுகதைத் தொகுப்பில் காணலாகும் பெண்ணியச் சிந்தனையின் வழி அறக்கருத்துகள்.

**முனைவர் ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ்,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தூய வளனார் கல்லூரி, திருச்சி -2

மின்னஞ்சல் முகவரி – jaminaron@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பெண் எழுத்தாளர் வி.லீமாரோஸ் அவர்களின் 'பௌர்ணமி வெளிச்சம்' என்னும் சிறுகதைத் தொகுப்பில் காணப்படும் மனைப் பெண்ணியத்தின் வழி அறக்கருத்துகள் ஆராயப்பெற்றுள்ளன. சிறுகதையின் இலக்கணம், பெண்ணியம் என்பதன் வரையறை, அதன் வகைகளுாள் ஒன்றான மனைப் பெண்ணியத்தை எழுத்தாளரின் சிறுகதைகளில் பொருத்திப் பார்த்து அதன் வழி அறக்கருத்துகளை முன்மொழிதலே இவ்-ஆய்வாகும்.

**முன்னுரை**

தமிழ்மொழியில் வளர்ந்து பெருகியுள்ள பெரும் இலக்கியப் பிரிவாம் இருபதாம் நூற்றாண்டின் புதையலான 'சிறுகதை' மேனாட்டார் வரவிலும் அறிவியல் வளர்ச்சியிலும் பத்திரிக்கைகளின் பக்கபலத்திலும் ஆலமரமாக வளர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. கதை சொல்லும் பழக்கமும், கேட்கும் பழக்கமும், வழக்கமாகி எல்லா நாட்டு மக்களிடையேயும் பரவியுள்ள நிலையில் கற்பனைகள், உண்மை நிகழ்வுகள் மற்றும் நகைச்சுவை கலந்து சிறுகதைகள் எழுதப்படுகின்றன. மனித சமுதாயத்தில் கதை மிகப் பெரிய சொத்தாகத் திகழ்கின்றது. தனக்கேயுரிய அமைப்புமுறை, ஒருமைப்பாடு, நிகழ்ச்சிகள், அனுபவத்தின் கூறுகள், தனித்தன்மை வாய்ந்த பாத்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதான தனியொரு இலக்கியமாகத் திகழும் சிறுகதையின் உருவாக்கத்திற்குக் காரண கர்த்தாவாகத் திகழ்பவர் சிறுகதை உலகின் தந்தையான உருசிய நாட்டைச் சேர்ந்த ஆன்டன் செகாவ் ஆவார். பல அலுவல்களுக்கு இடையே சிறிது நேரம் மனதிற்கு ஓய்வும் சுவையும் தருகின்ற

சிறுகதைகளின் மத்தியில் முளைத்தெழுந்த ‘பௌர்ணமி வெளிச்சம்’ என்னும் சிறுகதைத் தொகுதியானது வாழ்க்கையின் அனுபவத்தையும், உற்சாகத்தையும், சொல்வளத்தையும் ,கருத்துச்செறிவையும் கொண்டுள்ளது.

**சிறுகதை**

சிறுகதை என்னும் சிறிய முயற்சி சீரிய முறையில் வளர்ச்சிப் பெற்று உலகெங்கும் நிழல் தரும் கற்பக விருட்சமாக வேர் விட்டுப் படர்ந்துள்ளன. புனைகதைகள் என்றழைக்கப்படும் சிறுகதைகள் தொடக்கம், வளர்ச்சி, சிக்கல், உச்சக்கட்டம், முடிவு என்னும் ஐந்து கூறுகளைக் கொண்டுள்ளன. சிறுகதையின் தொடக்கமும் முடிவும் குதிரைப்பந்தயம் போன்று விரைவாகவும் சுவை மிக்கதாகவும் அமைய வேண்டும். அரை மணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக் கூடிய அளவுடையதாயிருக்க வேண்டுமென அமெரிக்க எழுத்தாளர் எட்கர் ஆலன்போ கூறுவார். புனைகதைகள் குறித்து தொல்காப்பியம் செய்யுளியலில் “பொருளொடு புணராப் பொய்மொழியானும் பொருளொடு புணர்ந்த நகைமொழியானும்” என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இலக்கணமுடன் அமைந்த முதல் தமிழ்ச் சிறுகதை 19ஆம் நூற்றாண்டில் வரகனேரி வேங்கட சுப்பிரமணியர் எழுதிய ‘குளத்தங்கரை அரச மரம் சொன்ன கதை’ ஆகும். இலக்கணமின்றி அமைந்த முதல் தமிழ்ச் சிறுகதை 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய ‘பரமார்த்த குரு கதை’ ஆகும்.

**பெண்ணியம்**

பெண்களின் முன்னேற்றத்தையும் உரிமையையும் நிலைநாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்ட பெண்ணியமானது உலகளாவிய அமைப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ‘பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள’ என்ற பொருளைத்தரும் femina என்ற இலத்தின் சொல் feminism என்ற ஆங்கிலச் சொல்லிலிருந்து பிறந்ததாகும். பெண்களைச் சுயமாக முடிவெடுக்கச் செய்வதும், தங்கள் விருப்பப்படியே வாழ்க்கையை நடத்திச் செல்வதையும் வலியுறுத்துகிறது. ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெறச் செய்து சமுதாய அளவில் பெண்களை முன்னேற்றுவது ஒன்றையே கொள்கையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. சுருங்கக் கூறின் பெண்ணின் உரிமைகளைப் பேசுவதையும் சமத்துவமின்மையைக் களைய முற்படும் செயற்பாடுகள் மற்றும் கோட்பாடுகளின் தொகுப்பே பெண்ணியம் எனக் கூறலாம்.

**பெண்ணிய வகைகள்**

கொள்கை அளவில் மாறுபாடு கொண்டுள்ள பெண்ணியமானது தன்னுள் இணைந்துள்ள பெண்களின் வாழ்க்கைச் சூழலுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சி கண்டுள்ளன. அவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்தவை தாராளப் பெண்ணியம் (Liberal Feminism), சமதர்ம பெண்ணியம் (Socialist Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) என்பனவாகும். பெண்ணியமானது பெண் விடுதலையையும், பெண்ணுரிமையையும் மையமாகக் கொண்டிருந்தாலும் அவற்றை அணுகும் முறையில் வேறுபடுகின்றன. இவைகள் தவிர ஆன்மிகப் பெண்ணியம் (Spiritual Feminism), கிறித்துவப் பெண்ணியம் (Christian Feminism) கலாச்சாரப் பெண்ணியம் (Cultural Feminism), மனைப் பெண்ணியம் இல்லம்) (Domestic Feminism), தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism), கருப்புப் பெண்ணியம் (Black Feminism), சூழல் பெண்ணியம் (Eco-Feminism) ஆகியவை மேலைநாடுகளில் தோன்றியவையாகும்.

**தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism)**

சமூக அமைப்பினை மாற்றியும் முன்னேற்றியும் அதன் மூலம் பெண்களுக்குத் தேவையான அளவு விடுதலையும் மதிப்பையும், தகுதியையும் பெற்றுத் தர முயலும் அமைப்பே தாராளவாதப் பெண்ணியமாகும். வாய்ப்புகளையும் விடுதலையையும் நீதியையும் புரட்சியானது அழித்து விடும் என்பது இவர்களின் வாதமாகும்.

**சமதர்ம பெண்ணியம் (Socialist Feminism)**

பெண்களின் ஒடுக்குமுறைக்குக் காரணம் முதலாளித்துவப் போக்கே எனவும் பொருளாதார விடுதலையே பெண்களைத் தனியுரிமை உள்ளவர்களாக உருவாக்கும் எனவும் நம்பினார்கள்.

**தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism)**

சமுதாயத்தில் உள்ள பிரச்சனைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராயும் இவ்வியக்கமானது பாரம்பரிய திருமணமுறையையும், குடும்ப அமைப்பினையும் அடியொடு ஒழிக்க வேண்டும் என குரல் கொடுத்தது.

**ஆன்மிகப் பெண்ணியம் (Spiritual Feminism)**

மதம் பற்றிய வெளிப்படையான கருத்து வளர்ச்சியை, விழிப்புணர்வை பெண்களுக்குள் உருவாக்குவதே ஆன்மிகப் பெண்ணியமாகும். இறைவனுக்கு முன் பால்பேதம் கூடாது என்பதை நிலை நாட்டுவதே இவர்களின் நோக்கமாகும்.

**கிறித்துவப் பெண்ணியம் (Christian Feminism)**

விவிலியம் கூறும் கருத்தாக்கங்களும் கிறித்துவ ஆலயங்கள் பெண்களை நடத்தும் அடக்குமுறை போக்கும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கும் தன்மையைச் சுட்டிக்காட்டும் வண்ணம் கிறித்துவ ஆலயங்களுக்கு எதிராக குரல் கொடுத்தது.

**கலாச்சாரப் பெண்ணியம் (Cultural Feminism)**

பெண்கள் தங்களைச் சக்தி உள்ளவர்களாக உருவாக்கிக் கொள்ளவும் தங்கள் திறமைகளை இனம் காட்டவும் முற்பட்டதன் விளைவே கலாச்சாரப் பெண்ணியம் உருவானதாகும். கலைகள் அனைத்தும் பெண்ணை மையப்படுத்தியதாகவே இருக்க வேண்டுமென விரும்பிச் செயல்பட்டனர்.

**மனைப் பெண்ணியம் (Domestic Feminism)**

தொடக்கக் கால சிந்தனையான இவ்வியக்கமானது இல்லம் சார்ந்தப் பணிகளில் முன்னேற்றம் காண்பதன் வாயிலாக பெண்களின் தரத்தையும் அங்கீகாரத்தையும் உயர்த்திக் கொள்ள முடியும் என நம்பியது. இல்லக் கடமைகளையும் தாய்மைக் கடமைகளையும் பெண்களாலேயே ஒழுங்காகச் செய்ய முடியும் எனவும் நம்பியது.

**தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism)**

எந்தவொரு மனிதனும் மற்றொரு மனிதனை அதிகாரத்தினாலோ பயமுறுத்தலினாலோ ஆள முடியாது என்பது இதன் குறிக்கோளாகும். அதாவது தலைவன் என்றும் தொண்டன் என்றும் மனிதரைப் படிநிலைப்படுத்தாமல் எல்லோருக்கும் சமபங்கு செயல்பாடு என்று இயங்குவதே தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியமாகும்.

**கருப்புப் பெண்ணியம் (Black Feminism)**

கருப்பு இனப் பெண்கள் தங்கள் இனப் பிரச்சனைகளை முன்வைத்து விடுதலைக்குக் குரல் கொடுத்தனர்.

**சூழல் பெண்ணியம் (Eco-Feminism)**

போர் வன்முறைகள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராக குரல் கொடுத்து வருகின்றனர். அணு ஆயுதத்தைப் போருக்காகப் பயன்படுத்துவதைச் சூழல் பெண்ணியவாதிகள் கடுமையாக எதிர்த்துப் போராடுகின்றனர்.

**பௌணர்மி வெளிச்சக் கீற்றுகள்**

பத்தொன்பது சிறுகதைகளைக் கொண்டிருக்கும் பௌணர்மி வெளிச்சம் என்னும் சிறுகதைத் தொகுப்பானது பெண்ணிய வகைகளுள் மனைப் பெண்ணியத்தையே அதிகம் பேசுகிறது. ஒன்பது கதைகள் மனைப் பெண்ணியத்தையும் மூன்று கதைகள் கிறித்துவப் பெண்ணியத்தையும் இதர கதைகள் மனித நேயத்தையும் ஆலய வழிபாட்டிற்கு முக்கியத்துவத்தையும் தருகின்றன.

**மனைப் பெண்ணியம் பேசும் சிறுகதைகள்**

**பெண் என்பவள்**

'ச்சே! என்ன பெண் ஜென்மமோ.. என்று மனதிற்குள்ளேயே தன்னைச் சபித்துக் கொண்ட ஜெயந்தி, பிச்சைக்காரனையும் சந்தியாவையும் அமுதாவையும் அப்பாவின் நன்பரையும் சந்தித்தப் பின்பு பெண்களை பூமாதேவியாக, தாயாக, தெய்வமாக, சிறந்த ஆசிரியராக, பொறுப்புள்ள உயிராகப் பார்க்கும் நல்ல உள்ளங்களும் இருக்கத்தான் செய்கின்றன எனப் புரிந்து கொள்ளும்போது அவள் உள்ளம் பூரிப்படைகிறது.

**ஆண்ட்டியைப் போல..**

குழந்தை சசியின் இன்னட்டு (சாக்லேட்) சாப்பிடும் குணத்தை மாற்றுவதற்காக இன்னட்டு சாப்பிட்டதால் தனது அழகான பல் வரிசைகள் கெட்டு விட்டதாக பொய் சொல்லி தனது மதிப்பையே குறைத்துக் கொள்ளும் பக்கத்து வீட்டு ஆண்ட்டி.

**ஆனந்தம் இன்று ஆரம்பம்**

வீட்டில் அப்பா, அம்மா, பிள்ளைகள் செய்யும் தியாகத்தை விவரிக்கிறது.

**திருப்பங்கள்**

வசதியாகவும் ஆடம்பரமாகவும் வாழ வேண்டும் என்று நினைத்து கணவனைப் பிரிந்து தகப்பன் வீட்டில் வாழும் கஸ்தூரி நடைபாதையில் வசிக்கும் ஏழையின்

உரையாடலின் மூலம் மனமாற்றமடைந்து கணவன் வீட்டிற்குச் செல்லும்போது கணவனின் இறந்த உடலைக் காண்கிறாள்.

**நினைத்தப்படி**

குடும்பப் பெண்ணிற்குரிய குணங்கள் இல்லாத அனிதாவால் குடும்பத்தில் ஏற்படும் குழறுபடைகளைச் சொல்கிறது.

**நீரைத் தேடும் பயிர்கள்**

படிப்பு வரவில்லை என்பதற்காக இளைய மகள் சங்கீதாவை வெறுக்கும் பெற்றோர்களை சங்கீதாவின் தற்கொலை முயற்சி மனம் மாற்றுகிறது.

**சொட்டு மருந்து**

தன்னைப் போல் மற்ற குழந்தைகளும் ஊனமாகி விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் அனைவரிடமும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கச் சொல்லும் சுமதியின் நேயம்.

**ஒரே ஒரு போட்டோ**

தன்னைப் பராமரிக்கும் வீட்டு முதலாளியின் குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் தன் உயிரையே ஜெயசீலி என்னும் சிறுமி இழக்கிறாள்.

**அஞ்சலை ஆத்தா**

மகனையும் மகளையும் இழந்த பின்பு பேரக்குழந்தைகளுக்காக வாழும் அஞ்சலையின் குணமும் ஊர் மக்களிடம் காட்டும் மனித நேயமும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

**மனைப் பெண்ணியம்**

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும், பிறருடைய நலனுக்காய் வாழ்வதே வாழ்வுக்கு அர்த்தம் தரும் போன்ற கருத்துக்களைப் புலப்படுத்தும் முதல் மற்றும் இரண்டாம் சிறுகதையில் சிறந்ததொரு மகளாகவும் அன்பான மனைவியாகவும் பொறுப்பான பணியாளராகவும் பெண்ணே சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்ற பிம்பத்தைக் காட்டியிருப்பதன் வாயிலாக மனைப் பெண்ணியம் பேசப்படுகின்றது. நான்காம் கதையில் வரும் அமலி கதைப்பாத்திரமானது குடும்பத்திற்காகவே வாழும் பாத்திரமாகப் படைத்து மனைப் பெண்ணியத்தை ஆசிரியர் ஆதரிக்கிறார். இல்லத்தைத் துலங்க வைக்காமல், ஒளி வீசச் செய்யாமல் தவறி விட்டோமே என்று வருந்தும் கஸ்தூரி கதைப்பாத்திரம்

வாயிலாக ‘திருப்பங்கள்’ என்னும் கதையில் மனைப்பெண்ணியத்தைப் பதிவு செய்கிறார். குடும்பத்திற்கு ஏற்ற குணசுந்தரியாக வாழாத பெண்ணாகச் சித்திரிக்கும் ‘நினைத்தப்படி’ என்ற சிறுகதையும் படிப்பு வரவில்லை என்றதும் சாகத் துணிவதும் பின்னர் குடும்பத்தாரால் புரிந்து கொள்ளப்பட்டதும் அச்சிறுமி மகிழ்ச்சியாக இருப்பதுமாகச் சித்திரிக்கும் ‘நீரைத் தேடும் பயிர்கள்’ என்ற சிறுகதையும் மனைப்பெண்ணியத்தை நோக்கியே பயணிக்கின்றது. இளம்பருவத்தில் தனக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்காத பெற்றோரைக் குறைகூறாது பிறரது நன்மைக்காகச் செயல்படும் சுமதியாகட்டும், தன்னுடைய முதலாளியின் குடும்பம் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதற்காக தன்னுயிரையே மாய்த்துக் கொள்ளும் பெண்ணாக ஜெயசீலி சித்திரிக்கப்படுவதாகட்டும், கண்தானம் செய்தலின் முக்கியம் குறித்துக் கூறுவது என்றாலும்கூட அதையும் ஒரு குடும்ப கட்டமைப்புக்குள் கொண்டு வந்து மனைப் பெண்ணியமே முதன்மை என்று ரவீந்திரன் பாத்திரம் மூலம் கூறியிருப்பதும் ஆசிரியரின் மனைப்பெண்ணியம் மீதான காதலை வெளிப்படுத்துகிறது. பெற்றோரை இழந்த பின்பும் ஆடவனின் உதவியை நாடுபவராக, பொருளாதாரத்தின் மூலம் தன்னுடைய வாழ்க்கை உயர்ந்து விடும் என நினைப்பவராக ‘அழைப்பின் குரல்’ என்ற சிறுகதையில் வரும் பெண்களும் ஆன்மிகப் பெண்ணியம் பேசினாலும் குடும்பத்துக்காக வாழும் பெண்ணான அஞ்சலை ஆத்தாவும் மனைப்பெண்ணியத்தையே பிரதிபலிக்கின்றனர்.

**அறக்கருத்துகள்**

- பெண்களின் முன்னேற்றத்தைத் தகர்க்கும் தாழ்வு மனப்பான்மை வேண்டாம்.
- பிறரை நலமுடன் வாழ வைக்க தாழ்ந்து போவது நலம்.
- குடும்பம் மகிழ்ச்சியாக இருக்க ஒருவருக்கொருவர் அன்புடனும் தியாகத்துடனும் திகழ வேண்டும்.
- இல்லற வாழ்வு இனிக்க தம்பதியர் இருவரும் ஒருவருக்கொருவர் புரிதலோடு விட்டுக் கொடுத்தும் கருத்தொருமித்தும் வாழ வேண்டும்.
- அழகு என்பது புறத்தோற்றத்திலும் வரதட்சணையிலும் இருப்பதில்லை. மாறாக குண அழகே அழகு.

- குழந்தைகளின் திறன் அறிந்து அவர்களின் மேல் கல்விச் சுமையைச் சுமத்த வேண்டும். குழந்தைகள் மனம் புண்படும்படியாக கூறியதையே திரும்பத் திரும்ப மன அழுத்தம் தரும் தொனியில் கூறக் கூடாது.
- தன்னலமின்றி பிறர் நலத்தோடும் தியாக உள்ளத்தோடும் வாழ வேண்டும்.
- தன்னுடைய முதலாளியின் / நம்பிக்கைக்குரியவரின் நலனுக்காக தன்னுயிரைக் தரவும் முன்வர வேண்டும்.
- மனிதநேயத்தோடு வாழும் வாழ்க்கையே முழு முகவரி தரும்.

**ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்**


1.அடைக்கலசாமி எம்.ஆர்., தமிழ் இலக்கிய வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, மறுபதிப்பு 1981.

2.இளவரசு சோம,.,இலக்கிய வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600108, மறுபதிப்பு 2001.

3.தமிழாய்வுத்துறைப் பேராசிரியர்கள், சமூகவியல் நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி 600002, பத்தாம் பதிப்பு 2017.

4. பிரேமா இரா., பெண்ணியம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை – 17, ஆறாம் பதிப்பு 20014.

5. லீமாரோஸ் வி., பௌர்ணமி வெளிச்சம், எஸ்.எஸ். பப்ளிகேஷன், சென்னை 600 017, முதற்பதிப்பு 2014.